Private E-Sevai Center
CSC Center
STAR RAINBOW SERVICES
VADAPALANI
8144337349

ஹலோ மிரர் மெட்ராஸ்
RNI No.TNBIL/2021/81709
hellomadrasdaily@gmail.com
தினசரி காலை நாளிதழ்
உள்ளது உள்ளபடி

KARUNAII TRUST
அன்னை சிறப்பு பள்ளி
Tamilnadu Association For The Rights of All Types of Differently Abled and Caregivers - TARATDAC
Contact :
98413 59935

மலர் 3 | சென்னை | தினசரி | 4 பக்கம் | செவ்வாய்கிழமை, மார்ச் 19 2024 | இதழ் 248

# தி.மு.க. கூட்டணியில் காங்கிரசுக்கு நெல்லை, கடலூர் உட்பட 10 தொகுதிகள் ஒதுக்கீடு

## தி.மு.க. போட்டியிடும் 21 தொகுதிகள் பட்டியல் ம.தி.மு.க. திருச்சியில் போட்டி



சென்னை, 19 மார்ச் 2024: தி.மு.க. கூட்டணியில் காங்கிரஸ் போட்டியிடும் 10 தொகுதி எந்தெந்த தொகுதிகள் என்று இன்று அதிகாரப்பூர்வமாக அறிவிக்கப்பட்டது.

ம.தி.மு.க.வுக்கு திருச்சி தொகுதி ஒதுக்கீடு செய்யப்பட்டது.

தமிழகம் மற்றும் புதுச்சேரியில் மொத்தமுள்ள 40 தொகுதிகளுக்கான நாடாளுமன்ற தேர்தல் அடுத்த மாதம் 19 ந்தேதி நடக்கிறது. இதற்கான வேட்புமனு தாக்கல் நாளை மறுநாள் துவங்குகிறது.

இதில் தி.மு.க. கூட்டணியில் இடம்பெற்ற காங்கிரஸ் கட்சிக்கு புதுச்சேரியை சேர்த்து 10 தொகுதிகளை தி.மு.க. ஒதுக்கி உள்ளது. ஆனால் இதுவரை எந்தெந்த தொகுதிகள் என்பது முடிவாகாமல் இழுப்பறியில் இருந்தது.

இந்த நிலையில் இன்று முதலமைச்சர் ஸ்டாலினை சந்தித்த தமிழக காங்கிரஸ் தலைவர் செல்வ பெருந்தகை 10 தொகுதிகள் அடங்கிய பட்டியலுடன் கூடிய ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டார்.

அதன்படி,

1. திருவள்ளூர் (தனி), 2. கடலூர், 3. மயிலாடுதுறை, 4. சிவகங்கை, 5. திருநெல்வேலி, 6. கிருஷ்ணகிரி, 7. கரூர், 8. விருதுநகர், 9. கன்னியாகுமரி, 10. புதுச்சேரி ஆகிய தொகுதிகளில் காங்கிரஸ் போட்டியிடும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த தேர்தலில் காங்கிரஸ் போட்டியிட்ட திருச்சி, ஆரணி, தேனி தொகுதிகள் இம்முறை ஒதுக்கப்படவில்லை. இதற்கு பதிலாக மயிலாடுதுறை, திருநெல்வேலி, கடலூர் தொகுதிகள் காங்கிரஸ் கட்சிக்கு புதிதாக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

பின்னர் நிருபர்களிடம் பேசிய செல்வபெருந்தகை, 'தி.மு.க. கூட்டணி 40 தொகுதிகளை கைப்பற்றும்' எனத் தெரிவித்தார்.

தி.மு.க. கூட்டணியில் ம.தி.மு.க.வுக்கு திருச்சி நாடாளுமன்ற தொகுதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதற்கான ஒப்பந்தத்தில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின், வைகோ ஆகியோர் கையெழுத்திட்டனர்.

கடந்த தேர்தலில் ம.தி.மு.க ஈரோடு தொகுதியில் போட்டியிட்ட நிலையில், இம்முறை திருச்சி தொகுதியில் போட்டியிடுகிறது. மதிமுக சார்பில் வைகோவின் மகன் துரை வைகோ திருச்சி தொகுதியில் போட்டியிடுவார் என்று எதிர்ப்பார்க்கப்படுகிறது.

தமிழகத்தில் கூட்டணியில் இந்திய யூனியன் முஸ்லிம் லீக் கட்சிக்கு ராமநாதபுரம் தொகுதியும், கொங்கு நாடு மக்கள் தேசிய கட்சிக்கு நாமக்கல் தொகுதியும், விடுதலை சிறுத்தைகள் கட்சிக்கு சிதம்பரம், விழுப்புரம் தொகுதிகளும், மார்க்சிஸ்ட் கட்சிக்கு மதுரை, திண்டுக்கல் தொகுதிகளும், கம்யூனிஸ்ட் கட்சிக்கு நாகை, திருப்பூர் தொகுதிகளும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. கூட்டணி கட்சிகளுக்கு 18 தொகுதிகளை ஒதுக்கி எஞ்சிய 21 தொகுதிகளில் தி.மு.க. போட்டியிட உள்ளது.

தி.மு.க. போட்டியிடும் தொகுதிகள்வடசென்னை, தென்சென்னை, மத்திய சென்னை, ஸ்ரீபெரும்புதூர், காஞ்சிபுரம், அரக்கோணம், திருவண்ணாமலை, வேலூர், தருமபுரி, பெரம்பலூர், கள்ளக்குறிச்சி, ஈரோடு, சேலம், நீலகிரி, கோவை, தஞ்சாவூர், தென்காசி, ஆரணி, திருநெல்வேலி, தூத்துக்குடி, தேனி ஆகிய 21 தொகுதிகளில் தி.மு.க. போட்டியிடுகிறது.

# கவர்னர் பதவியில் இருந்து தமிழிசை சவுந்தரராஜன் ராஜினாமா! நாடாளுமன்ற தேர்தலில் பேட்டி!!



சென்னை, 19 மார்ச் 2024: நாடாளுமன்ற தேர்தலில் தமிழிசை சவுந்தரராஜன் போட்டியிடலாம் என தகவல் வெளியான நிலையில் தனது கவர்னர் பதவியை ராஜினாமா செய்வதாக ஜனாதிபதிக்கு கடிதம் எழுதியுள்ளார்.

கடந்த 2019ம் ஆண்டு நாடாளுமன்ற தேர்தலில் தூத்துக்குடி தொகுதியில் கனிமொழியை எதிர்த்து தமிழிசை சவுந்தரராஜன் போட்டியிட்டு, தோல்வி அடைந்தார். அதே ஆண்டு செப்டம்பர் 1ம் தேதி தெலுங்கானா கவர்னராக நியமிக்கப்பட்டார். அதன்பிறகு, 2021ம் ஆண்டு பிப்ரவரி மாதம் புதுவை துணை நிலை கவர்னர் பொறுப்பும் தமிழிசை சவுந்தரராஜனுக்கு கூடுதல் பொறுப்பாக வழங்கப்பட்டு இருந்தது.

தற்போது தமிழகம் மற்றும் புதுச்சேரியில் வரும் ஏப்ரல் 19ம் தேதி அன்று ஒரே கட்டமாக நாடாளுமன்றத் தேர்தல் நடைபெறுகிறது. இதற்கான வேட்புமனுத்தாக்கல் நாளை மறுநாள் தொடங்குகிறது. இந்த நிலையில் புதுச்சேரி துணை நிலை கவர்னர் மற்றும் தெலுங்கானா மாநில கவர்னர் பொறுப்பை தமிழிசை சவுந்தராஜன் ராஜினாமா செய்துள்ளார். இதற்கான ராஜினாமா கடிதத்தை ஜனாதிபதி திரவுபதி முர்முவுக்கு அவர் அனுப்பி உள்ளார். நாடாளுமன்றத் தேர்தலில் தமிழிசை சவுந்தராஜன் போட்டியிடலாம் என ஏற்கெனவே கூறப்பட்டு வந்தது. அது பற்றிய கேள்விக்கு தமிழிசை, “கவர்னர் பதவியை நான் ராஜினாமா செய்ய உள்ளேன் என்பது தவறான செய்தி. கட்சி மேலிடம் என்ன உத்தரவிடுகிறதோ அதைத்தான் நான் செய்து வருகிறேன். எப்போதும் மக்களுக்காக நான் இருப்பேன். பிரதமர் மோடி மற்றும் ஸ்ரீ ராமரின் தயவால் நான் எனது மனசாட்சிப்படி பணியாற்றி வருகிறேன். எனவே கவர்னர் பதவியை ராஜினாமா செய்வேன் என்ற பேச்சுக்கே இடமில்லை” என்று விளக்கமளித்தார்.

இந்த நிலையில் தமிழிசை சவுந்தராஜன் தனது கவர்னர் பதவியை ராஜினாமா செய்துள்ளார். புதுச்சேரி, கன்னியாகுமரி, தூத்துக்குடி ஆகிய தொகுதிகளில் ஏதேனும் ஒரு தொகுதியில் பா.ஜ.க. சார்பில் தமிழிசை சவுந்தராஜன் போட்டியிட வாய்ப்புகள் உள்ளதாக கூறப்படுகிறது.

புதுச்சேரி துணை நிலை கவர்னராக இருந்த தமிழிசை சவுந்தராஜன் அப்பகுதி மக்களுக்கு நன்கு அறிமுகமானவராக உள்ளார். கவர்னராக தன்னை வெறும் மாளிகைக்குள் மட்டும் சுருக்கிக் கொள்ளாமல், பொது நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வது, மக்களுடன் கலந்துரையாடுவது உள்ளிட்ட பணிகளை தமிழிசை செய்து வந்தார். எனவே புதுச்சேரி தொகுதி தமிழிசைக்கு சாதகமாக இருக்கும் என கூறப்படுகிறது.

கன்னியாகுமரியை பொறுத்தவரை அத்தொகுதி தமிழிசை சவுந்தராஜனின் பூர்வீக தொகுதியாக உள்ளது. தமிழ்நாட்டில் பாஜக பலமாக உள்ள தொகுதிகளில் ஒன்றாக கன்னியாகுமரி தொகுதி உள்ளது. அத்தொகுதில் ஏற்கெனவே மத்திய இணை அமைச்சராக இருந்த பொன்.ராதாகிருஷ்ணனுக்கு வாய்ப்பு கிடைக்கும் என கூறப்பட்டு வந்த நிலையில் தற்போது தமிழிசை பெயரும் இடம் பெறுகிறது.




PASSPORT | MSME | PAN | AADHAAR
FSSAI | PATTA | LEGALHEIR
2,4 WHEELER INSURANCE
PROPERTY TAX, EB - NAME TRANSFER
STATE AND CENTRAL GOVT
AUTHORISED FRANCHISEE
ALL ONLINE SERVICES
இ-சேவை மையம்
ஸ்டார் ரெயின்போ சர்வீசஸ்
11,SOUTH PERUMAL KOIL STREET, VADAPALANI, CHENNAI - 600 026.
8148231942 / 8144337349
பொது இ-சேவை மையம்

ஹலோ மிரர் மெட்ராஸ்
hellomadrasdaily@gmail.com RNI No.TNBIL/2021/81709 தினசரி காலை நாளிதழ்
உள்ளது உள்ளபடி



# பொன்முடிக்கு பதவி பிரமாணம் செய்ய மறுப்பு கவர்னர் ரவிக்கு எதிராக தமிழக அரசு சுப்ரீம் கோர்ட்டில் மனு

சென்னை, 19 மார்ச் 2024: பொன்முடிக்கு அமைச்சராக பதவி பிரமாணம் செய்து வைக்க, கவர்னர் ஆர்.என்.ரவி மறுப்பு தெரிவித்ததை எதிர்த்து சுப்ரீம் கோர்ட்டில் தமிழக அரசு மனுத்தாக்கல் செய்துள்ளது.

முதல்வர் ஸ்டாலின் தலைமையிலான அமைச்சரவையில், உயர் கல்வித்துறை அமைச்சராக இருந்த பொன்முடி மீதான சொத்து குவிப்பு வழக்கில், அவருக்கு சென்னை ஐகோர்ட்டு 3 ஆண்டு சிறை தண்டனையும், ரூ.50 லட்சம் அபராதமும் விதித்தது. இதனால் அவரது பதவி பறிபோனது. இதனால், பொன்முடி தன் அமைச்சர் மற்றும் எம்.எல்.ஏ., பதவியை இழந்தார்.

இதனிடையே ஐகோர்ட்டின் இந்த தீர்ப்புக்கு சுப்ரீம் கோர்ட்டு தடை விதித்ததால், பொன்முடி மீண்டும் எம்.எல்.ஏ.வாக அறிவிக்கப்பட்டார். பொன்முடி மீண்டும் எம்.எல்.ஏ.வாக அறிவிக்கப்பட்டுள்ளதால், அவரை மீண்டும் அமைச்சரவையில் இணைத்துக்கொள்ள முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின் முடிவு செய்துள்ளார்.

மீண்டும் எம்.எல்.ஏ., வான பொன்முடிக்கு அமைச்சராக பதவிப் பிரமாணம் செய்து வைக்கும்படி, கடந்த 13ம் தேதி கவர்னர் ரவிக்கு முதல்வர் ஸ்டாலின் கடிதம் அனுப்பினார். இதனிடையே, பொன்முடிக்கு அமைச்சராக பதவிப்பிரமாணம் செய்து வைக்க இயலாது என கவர்னர் ஆர்.என்.ரவி மறுப்பு தெரிவித்தார். பொன்முடி மீதான வழக்கு நிலுவையில் உள்ளதால் பதவிப் பிரமாணம் செய்து வைக்க இயலாது என கவர்னர் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் பொன்முடிக்கு அமைச்சராக பதவி பிரமாணம் செய்து வைக்க, கவர்னர் ஆர்.என்.ரவி மறுப்பு தெரிவித்ததை எதிர்த்து சுப்ரீம் கோர்ட்டில் தமிழக அரசு மனுத்தாக்கல் செய்துள்ளது. மனுவில், பொன்முடிக்கு பதவி பிரமாணம் செய்து வைக்க கவர்னர் ஆர்.என்.ரவிக்கு உத்தரவிட வேண்டும்" என தமிழக அரசு குறிப்பிட்டுள்ளது.

இந்த நிலையில், பொன்முடி பதவிப்பிரமாண விவகாரத்தில் கவர்னர் ஆர்.என்.ரவியின் செயலுக்கு தி.மு.க. கண்டனம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக தி.மு.க. எம்.பி., வில்சன் தனது எக்ஸ் தளத்தில் தெரிவித்து இருப்பதாவது;

"பொன்முடிக்கு பதவிப்பிரமாணம் செய்து வைக்காத கவர்னரின் செயல் நீதிமன்ற அவமதிப்பாகும். அரசமைப்பு சட்டத்திற்கு சிறிதும் மரியாதை அளிக்காமல் கவர்னர் மீண்டும் மீண்டும் தவறு இழைக்கிறார். தீர்ப்பு, தண்டனைக்கு நீதிமன்றம் தடை விதித்ததால், அந்த தண்டனை சட்டத்தின் பார்வையில் செல்லத்தக்கதல்ல. எப்போது அவர், வேண்டுமென்றே சுப்ரீம் கோர்ட்டின் தீர்ப்புகளை மீறி நடக்கவும், அரசியலமைப்பு முறைகளைக் களங்கப்படுத்தவும், சட்டத்தின் விதிகளைப் புறக்கணிக்கவும் தலைப்பட்டாரோ அப்போதே அவர் தாம் வகிக்கும் பதவியில் நீடிப்பதற்கான தகுதியை இழந்துவிட்டார். அரசியல் சாசனம், சட்டங்கள், சுப்ரீம் கோர்ட் உத்தரவுகள் மீது அக்கறை இல்லாத கவர்னரை உடனடியாக பதவி நீக்கம் செய்ய வேண்டும் என ஜனாதிபதியை வலியுறுத்துகிறேன் என தெரிவித்துள்ளார்.

# சேலத்தில் நாளை மோடி பிரச்சாரம் ஓ.பன்னீர்செல்வம், டி.டி.வி.தினகரன் ஆகியோர் பங்கேற்கிறார்கள். மேலும் கூட்டணி கட்சி தலைவர்களான ஜி.கே.வாசன், ஏ.சி.சண்முகம், பாரிவேந்தர், ஜான்பாண்டியன், தேவநாதன்

சென்னை, 19 மார்ச் 2024: சேலத்தில் நாளை நடைபெறும் பா.ஜ.க.வின் பிரம்மாண்ட பொதுக்கூட்டத்தில், பிரதமர் மோடி கலந்து கொண்டு தேர்தல் பிரச்சாரம் செய்கிறார்.

நாடாளுமன்ற தேர்தலையொட்டி நாடு முழுவதும் பிரதமர் மோடி சூறாவளி சுற்றுப்பயணம் செய்து பிரச்சாரம் செய்து வருகிறார். இந்த நிலையில் இன்று மாலை கோவையில் பிரதமர் மோடி ரோடு ஷோ (வாகன பேரணி) செல்கிறார். கோவை மேட்டுப்பாளையம் சாலையில் உள்ள சாய்பாபா காலனி போலீஸ் நிலையம் அருகே புறப்படும் இந்த வாகன பேரணி ஆர்.எஸ்.புரம் தலைமை தபால் நிலையம் அருகே முடிவடைகிறது. இந்த நிகழ்ச்சியில் பங்கேற்பதற்காக பிரதமர் மோடி கர்நாடக மாநிலம் சிவமொக்காவில் இருந்து விமானம் மூலம் மாலை 5.30 மணிக்கு கோவை வருகிறார்.

பின்னர் கார் மூலம் சாய்பாபா காலனிக்கு சென்று வாகன அணிவகுப்பு நிகழ்ச்சியில் பங்கேற்கிறார். இதில் கட்சி நிர்வாகிகள் உள்பட ஏராளமானோர் பங்கேற்கிறார்கள். வாகன அணிவகுப்பு நடைபெறும் பகுதியில் சாலையின் இருபுறத்திலும் இரும்பு தடுப்புகள் அமைக்கப்பட்டு உள்ளன.

இந்த நிகழ்ச்சியை முடித்து கொண்டு பிரதமர் மோடி இரவு கோவையில் தங்குகிறார்.

பின்னர் நாளை (19-ந் தேதி) கோவையில் இருந்து கேரள மாநிலம் பாலக்காடுக்கு பிரதமர் மோடி புறப்பட்டு செல்கிறார். அங்கு காலை 11.40 மணியளவில் நடைபெறும் தேர்தல் பிரச்சார பொதுக்கூட்டத்தில் பங்கேற்று பேசுகிறார். அதனை தொடர்ந்து சேலம், நாமக்கல், கரூர் பாராளுமன்ற தொகுதிக்கான பிரச்சாரக்கூட்டம் சேலத்தில் நாளை மதியம் 1.30 மணியளவில் நடக்கிறது. இதற்காக சேலம் அருகே உள்ள கெஜ்ஜல் நாயக்கன்பட்டியில் 44 ஏக்கர் பரப்பளவில் பிரம்மாண்ட பந்தல் மற்றும் மேடை அமைக்கப்பட்டுள்ளது.

இந்த பிரச்சாரக்கூட்டத்தில் கலந்து கொண்டு பிரதமர் மோடி சிறப்புரையாற்றுகிறார். பொதுக்கூட்ட மேடையில் பா.ஜ.க.வுக்கு ஆதரவு திரட்டி, மக்களையும் சந்திக்கிறார்.

இந்த கூட்டத்தில் மாநில பா.ஜ.க. தலைவர் அண்ணாமலை, மத்திய அமைச்சர் எல்.முருகன் மற்றும் கட்சி நிர்வாகிகள் திரளாக பங்கேற்கிறார்கள்.

கூட்டத்தில் முதல் முறையாக முன்னாள் முதலமைச்சர் ஓ.பன்னீர்செல்வம், டி.டி.வி.தினகரன் ஆகியோர் பங்கேற்கிறார்கள். மேலும் கூட்டணி கட்சி தலைவர்களான ஜி.கே.வாசன், ஏ.சி.சண்முகம், பாரிவேந்தர், ஜான்பாண்டியன், தேவநாதன் ஆகியோரும் கலந்து கொள்கிறார்கள். பிரதமர் மோடி வருகையையொட்டி 3 ஆயிரத்திற்கும் மேற்பட்ட போலீசார் பாதுகாப்பு பணியில் ஈடுபடுகிறார்கள். மேலும் பிரதமரின் தனி பாதுகாப்பு படையினரும் வெடிகுண்டு தடுப்பு பிரிவினரும் மைதானம் முழுவதும் 24 மணி நேரமும் தீவிர கண்காணிப்பு மற்றும் சோதனையில் ஈடுபட்டு வருகிறார்கள்.

பிரதமர் சேலம் வருகையையொட்டி பாதுகாப்பு கருதி இன்றும், நாளையும் 2 நாட்கள் டிரோன்கள் மற்றும் ஆள் இல்லாத விமானங்கள் பறக்க தடை விதித்து மாவட்ட போலீஸ் சூப்பிரண்டு அருண் கபிலன் உத்தரவிட்டுள்ளார்.

# பா.ஜ.க. கூட்டணி 411 தொகுதிகளில் வெற்றி பெற வாய்ப்பு:- புதியக் கருத்து கணிப்பில் தகவல்

சென்னை, 19 மார்ச் 2024: பாராளுமன்ற தேர்தலில் பா.ஜ.க. கூட்டணி 411 தொகுதிகளிலும் வெற்றி பெறும். இந்தியா கூட்டணிக்கு 105 தொகுதிகள் கிடைக்கும் என்று கருத்துக் கணிப்பில் தகவல் வெளியாகியுள்ளது.

பாராளுமன்ற தேர்தல் தொடர்பாக 'நியூஸ் 18' ஊடகம் சார்பில் நாடு முழுவதும் கருத்துக் கணிப்பு நடத்தப்பட்டு, அதன் முடிவுகள் வெளியிடப்பட்டு உள்ளன.

உத்தரபிரதேசத்தில் 80 தொகுதிகள் உள்ளன. இங்கு 77 தொகுதிகளில் பா.ஜ.க. கூட்டணி வெற்றி பெறும். இந்தியா கூட்டணி 2 தொகுதிகள், பகுஜன் சமாஜ் ஒரு தொகுதியில் வெற்றி பெறும்.

பீகாரில் 40 தொகுதிகள் உள்ளன. இங்கு பா.ஜ.க. கூட்டணி 38 தொகுதிகளில் வெற்றி பெறும். இந்தியா கூட்டணிக்கு 2 இடங்கள் மட்டுமே கிடைக்கும்.

மகாராஷ்டிராவில் 48 தொகுதிகள் உள்ளன. இதில் பா.ஜ.க. கூட்டணி 41 தொகுதிகளில் வெற்றி பெறும், இந்தியா கூட்டணிக்கு 7 இடங்கள் கிடைக்கும்.

மேற்கு வங்கத்தில் 42 தொகுதிகள் உள்ளன. இங்கு பா.ஜ.க. கூட்டணி 25 தொகுதிகளில் வெற்றி பெறும். ஆளும் திரிணாமூல் காங்கிரசுக்கு 17 இடங்கள் கிடைக்கும்.

மத்திய பிரதேசத்தில் 29 தொகுதிகள் உள்ளன. இங்கு கடந்த 2019 தேர்தலில் பா.ஜ.க. கூட்டணி 28 தொகுதிகளில் வெற்றி பெற்றது. வரும் தேர்தலில் பா.ஜ.க. கூட்டணி 28 தொகுதிகளில் வெற்றி பெறும். இந்தியா கூட்டணியை சேர்ந்த காங்கிரசுக்கு ஒரு தொகுதி மட்டுமே கிடைக்கும்.

பஞ்சாபில் 13 தொகுதிகள் உள்ளன. இங்கு இந்தியா கூட்டணியை சேர்ந்த ஆம் ஆத்மி, காங்கிரஸ் எதிர் எதிரணிகளாக போட்டியிடுகின்றன. பாஜக கூட்டணி 3-வது அணியாக போட்டியிடுகிறது. பஞ்சாபில் காங்கிரசுக்கு 7, பா.ஜ.க. கூட்டணிக்கு 3, ஆம் ஆத்மிக்கு ஒரு தொகுதி கிடைக்கும். ஜார்க்கண்டில் 14 தொகுதிகள் உள்ளன. இங்கு பா.ஜ.க. கூட்டணி 12 தொகுதிகளில் வெற்றி பெறும். ஜார்க்கண்ட் முக்தி மோர்ச்சா, காங்கிரசுக்கு தலா ஒரு தொகுதி கிடைக்கும்.

சத்தீஸ்கரில் 11 தொகுதிகள் உள்ளன. இதில் 10 தொகுதிகளை பா.ஜ.க. கைப்பற்றும். காங்கிரசுக்கு ஓர் இடம் கிடைக்கும்.

ராஜஸ்தானில் மொத்தம் 25 தொகுதிகள் உள்ளன. ஆளும் பா.ஜ.க. 25 தொகுதிகளிலும் வெற்றி பெறும்.

ஒடிசாவில் 21 தொகுதிகள் உள்ளன. இங்கு ஆளும் பிஜு ஜனதா தளம் 8, பா.ஜ.க. 13 தொகுதிகளில் வெற்றி பெறும்.

அசாமில் 14 தொகுதிகள் உள்ளன. இதில் பா.ஜ.க. கூட்டணி 12-ல் வெற்றி பெறும். ஏஐயுடிஎப், பிபிஎப் கட்சிகள் தலா ஒரு தொகுதியை கைப்பற்றும்.

உத்தராகண்டின் 5 தொகுதிகளையும் ஆளும் பா.ஜ.க. கைப்பற்றும்.

குஜராத்தின் 26 தொகுதிகளிலும் பா.ஜ.க. வெற்றி பெறும்.

அரியானாவின் 10 தொகுதிகள், டெல்லியின் 7 தொகுதிகள், இமாச்சல பிரதேசத்தின் 4 தொகுதிகளையும் பா.ஜ.க. கூட்டணி கைப்பற்றும்.

தமிழகத்தில் உள்ள 39 தொகுதிகளில் பா.ஜ.க. கூட்டணி 5 தொகுதிகளில் வெற்றி பெறும். இந்தியா கூட்டணியை சேர்ந்த தி.மு.க.-காங்கிரசுக்கு 30 தொகுதிகள் கிடைக்கும்.

கர்நாடகாவில் 28 தொகுதிகள் உள்ளன. இதில் 25 தொகுதிகளை பா.ஜ.க. கூட்டணி கைப்பற்றும். இந்தியா கூட்டணியை சேர்ந்த ஆளும் காங்கிரசுக்கு 3 தொகுதிகள் மட்டுமே கிடைக்கும்.

கேரளாவில் 20 தொகுதிகள் உள்ளன. இங்கு இந்தியா கூட்டணியை சேர்ந்த மார்க்சிஸ்ட் கூட்டணி, காங்கிரஸ் கூட்டணி தனித்தனியாக போட்டியிடுகின்றன. 3-வது அணியாக பா.ஜ.க.வும் களத்தில் உள்ளது. காங்கிரஸ் கூட்டணிக்கு 14, மார்க்சிஸ்ட் கூட்டணிக்கு 4 தொகுதிகள் கிடைக்கும். பா.ஜ.க.வுக்கு 2 தொகுதிகள் மட்டுமே கிடைக்கும்.

ஆந்திராவில் ஆளும் ஒய்.எஸ்.ஆர். காங்கிரஸ், பாஜக-தெலுங்கு தேசம்-ஜனசேனா கூட்டணி, காங்கிரஸ் இடையே கடும் போட்டி நிலவுகிறது. இங்கு 25 தொகுதிகள் உள்ளன. இதில் பா.ஜ.க. கூட்டணி 18 தொகுதிகளில் வெற்றி பெறும். ஒய்.எஸ்.ஆர். காங்கிரசுக்கு 7 தொகுதிகள் கிடைக்கும்.

தெலுங்கானாவில் ஆளும் காங்கிரஸ், பி.ஆர்.எஸ்., பா.ஜ.க. இடையே கடும் போட்டி நிலவுகிறது. இங்கு 17 தொகுதிகள் உள்ளன. இதில் பா.ஜ.க. 8, காங்கிரஸ் 6, பிஆர்.எஸ். கட்சிக்கு 2 தொகுதிகள் கிடைக்கும்.

நாடு முழுவதும் மொத்தம் உள்ள 543 பாராளுமன்ற தொகுதிகளில் பாஜக 350 தொகுதிகளிலும், பா.ஜ.க. கூட்டணி 411 தொகுதிகளிலும் வெற்றி பெறும்.

இந்தியா கூட்டணியில் பிரதான கட்சியான காங்கிரசுக்கு 49 தொகுதிகள் கிடைக்கும். இந்தியா கூட்டணிக்கு 105 தொகுதிகள் கிடைக்கும். இதர கட்சிகள் 27 இடங்களில் வெற்றி பெறும். தேசிய அளவில் பா.ஜ.க. கூட்டணிக்கு 48 சதவீத வாக்குகளும், இந்தியா கூட்டணிக்கு 32 சதவீத வாக்குகளும் கிடைக்கும்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# ஊழலை பற்றி பேச தி.மு.க.வுக்கு தகுதியில்லை: எல்.முருகன் பேட்டி கட்சி மேலிடம் உத்தரவிட்டால் தேர்தலில் போட்டியிடுவேன்

சென்னை, 19 மார்ச் 2024: ஊழல் குறித்து பேசுவதற்கு தி.மு.க.வைச் சேர்ந்தவர்கள் தகுதியற்றவர்கள் என்று மத்திய அமைச்சர் எல்.முருகன் தெரிவித்தார்.

கோவை விமான நிலையத்தில் செய்தியாளர்களிடம் எல்.முருகன் கூறியிருப்பதாவது:

பிரதமர் மோடி தென் இந்தியா முழுவதும் சுற்றுப்பயணம் மேற்கொண்டு வருகிறார். இன்றைய தினம் கோவையில் நடக்கும் வாகன பேரணியில் பங்கேற்கிறார். பிரதமரின் தமிழக வருகையானது பா.ஜ.க.வினருக்கு மேலும் ஊக்கத்தை கொடுத்துள்ளது. பிரதமரின் தமிழக வருகை பா.ஜ.க.வை வலுப்படுத்துவதோடு, பொது மக்களுக்கு நம்பிக்கை அளிக்கும் வகையிலும் அமைந்துள்ளது.

பிரதமர் மோடி தலைமையிலான பா.ஜ.க. கடந்த 10 ஆண்டுகளாக நல்லாட்சி நடத்தி வருகிறது. அடுத்த 25 ஆண்டுகளுக்கான வளர்ச்சியடைந்த இந்தியாவுக்கான திட்டத்தை இப்போதே தொடங்கி விட்டோம். பிரதமருக்கு அனைத்து தரப்பு மக்களும் ஆதரவு தருகின்றனர். குறிப்பாக தமிழக மக்கள் பெருமளவு ஆதரவு அளித்து வருகின்றனர். இன்றைய தினம் கோவை மக்கள் பிரதமரை வரவேற்க பேரன்போடு காத்திருக்கின்றனர்.

தி.மு.க.வும், இந்தியா கூட்டணி கட்சிகளும் தேசத்திற்கு எதிரானவர்கள். தேசிய வளங்களை கொள்ளை அடித்து ஊழல் செய்யும் கட்சிகள். பா.ஜ.க தேசத்தின் வளர்ச்சியை நோக்கி பணிகளை செய்து வருகிறது. தேசத்தை கொள்ளை அடிப்பதும், ஊழல் செய்வதும் இந்தியா கூட்டணி தான்.

2ஜி அலைக்கற்றை ஒதுக்கீடு வழக்கில் மிகப்பெரும் ஊழலை தி.மு.க.வின் ஆ.ராசா செய்துள்ளார். இந்த வழக்கில் தீர்ப்பு எப்போது வேண்டுமானாலும் வரலாம். ஊழல் பற்றி பேசுவதற்கு தி.மு.கவுக்கு எந்த அருகதையும் கிடையாது.

பொன்முடி விவகாரத்தில் அவர் குற்றமற்றவர் என கோர்ட் சொல்லவில்லை என்பதே கவர்னரின் விளக்கமாக உள்ளது.

கடந்த 10 ஆண்டுகளாக சிறந்த நல்லாட்சியை பிரதமர் வழங்கி வருகிறார். எந்தவொரு மத்திய மந்திரி மீதோ, எம்.பிக்கள் மீதோ சிறிய குற்றச்சாட்டு கூட சொல்ல முடியாத அளவுக்கு ஊழலற்ற நிர்வாகத்தை பா.ஜ.க. நடத்தி வருகிறது.

இந்தியாவை வளர்ச்சிப் பாதையில் கொண்டு செல்வது தான் பிரதமரின் ஒரே எண்ணமாக இருக்கிறது. அடுத்த 25 ஆண்டுகளுக்கு வளர்ச்சியடைந்த பாரதம் என்ற நோக்கத்தில் பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறார். பா.ஜ.க.வுக்கு தமிழகத்தில் ஆதரவு இருப்பதை காண முடிகிறது. தி.மு.க., அவர்களின் அமைப்புகளை ஏவி விட்டு தான் தேர்தல் பத்திரங்களை பெற்றனரா?.

நீலகிரியில் 2 முதல் 3 ஆண்டுகள் மக்களுக்காக பா.ஜ.க பணியாற்றி வருகிறது. கட்சி சொன்னால் நீலகிரி தொகுதியில் போட்டியிடுவேன். கட்சியின் கட்டளையை நிறைவேற்றுவது எனது பணி. கட்சி என்ன சொன்னாலும் கேட்டுக்கொள்வேன்.

பா.ஜ.க 3-வது முறையாக 400-க்கும் அதிகமான தொகுதிகளில் வெற்றி பெற்று ஆட்சி அமைக்கும். கோவை பா.ஜ.க.வின் கோட்டையாக உள்ளது. ஏற்கனவே இங்கு 2 முறை போட்டியிட்டு வெற்றி பெற்றுள்ளோம். கோவையில் பா.ஜ.க. போட்டியிட முடிவு செய்துள்ளது.

இவ்வாறு அவர் கூறினார்.

# ஜெயம் ரவி, 'அயலான்' இயக்குநர் ரவிக்குமார் உள்ளிட்டோர் கலந்து கொண்ட ஏர் ஃபிளிக் தயாரிப்பில் மீரா மஹதி இயக்கத்தில் வித்யாசாகர் இசையில் தீரஜ், ஸ்முரிதி வெங்கட், கோவை சரளா, எம்.எஸ். பாஸ்கர் நடிக்கும் 'டபுள் டக்கர்' திரைப்படத்தின் இசை வெளியீடு 8000 மாணவர்கள் முன்னிலையில் ஆரவாரம் பொங்க சென்னையில் பிரம்மாண்ட முறையில் நடைபெற்றது



*சென்னை, 19 மார்ச் 2024:* ஏர் ஃபிளிக் தயாரிப்பில் மீரா மஹதி இயக்கத்தில் வித்யாசாகர் இசையில் இந்தியாவிலேயே முதல்முறையாக புதுமையாக வடிவமைக்கப்பட்டுள்ள அனிமேஷன் பாத்திரங்களுடன் தீரஜ், ஸ்முரிதி வெங்கட், கோவை சரளா, எம்.எஸ். பாஸ்கர், முனிஷ்காந்த், காளி வெங்கட் சுனில் ரெட்டி, ஷாரா, கருணாகரன், யாஷிகா ஆனந்த், ஜார்ஜ் விஜய், டெடி கோகுல் உள்ளிட்டோர் நடித்திருக்கும் கலகலப்பான ஃபேன்டசி ஆக்ஷன் திரைப்படம் 'டபுள் டக்கர்'. கோடை விடுமுறையில் இப்படத்தை திரையரங்குகளில் வெளியிட திட்டமிடப்பட்டுள்ளது.

இப்படத்தின் இசை வெளியீடு வெள்ளிக்கிழமை (மார்ச் 15) மாலை சென்னையில் உள்ள சாய்ராம் கல்லூரியில் 8000 மாணவர்கள் முன்னிலையில் ஆரவாரம் பொங்க பிரம்மாண்டமாக நடைபெற்றது. இதன் முக்கிய அம்சங்கள் வருமாறு...

நடிகர் ஜெயம் ரவி பேசியதாவது...

"எனக்கு இருக்கும் மிகச்சில நெருங்கிய நண்பர்களில் ஒருவர் தீரஜ். அவருக்காக இங்கு வருவதற்கு மிகவும் மகிழ்ச்சி. அவர் சினிமாவில் நடிக்க ஆரம்பித்திருப்பது சந்தோஷம். விரைவில் நாங்கள் இருவரும் இணைந்து நடிக்க ஆசைப்படுகிறேன்.

'டபுள் டக்கர்' எனும் தலைப்பு இவருக்காகவே உருவானது போல் இருக்கிறது, ஏனென்றால் மருத்துவர், நடிகர் என்று இரண்டு பரிமாணங்களிலும் ஜொலித்துக் கொண்டிருப்பவர் தீரஜ். வித்யாசாகர் அவர்களின் இசைக்கு சிறு வயது முதல் இருந்து ரசிகன் நான். அவர் இந்த படத்திற்கு இசையமைத்திருப்பது மிகவும் மகிழ்ச்சி. இளைஞர்களுடன் இணைந்து அவர் பணியாற்றியுள்ளார். அவரது இசை இந்த படத்திற்கு கட்டாயம் பெரிய பக்கபலமாக இருக்கும்."

'அயலான்' இயக்குநர் ரவிக்குமார் பேசியதாவது...

"'அயலான்' திரைப்படத்தை இயக்கி உள்ளதால் கிராபிக்ஸ் தொழில்நுட்பத்தை பயன்படுத்தி ஒரு திரைப்படத்தை உருவாக்குவது என்பது எவ்வளவு கடினம் என்பது எனக்கு தெரியும். அதை செய்துள்ள 'டபுள் டக்கர்' குழுவினருக்கு வாழ்த்துகள்.

தீரஜ் அவர்களை ஒரு இருதய சிகிச்சை மருத்துவராக நான் அறிவேன். ஓய்வில்லாமல் உழைக்க வேண்டிய மருத்துவர் பணியையும் நடிப்பையும் அவர் மேற்கொள்வது மிகவும் சவாலானது. ஆனால் அதை அவர் திறம்பட செய்து வருகிறார். இருதய சிகிச்சை நிபுணரான அவர் திரைப்படங்களின் மூலம் மக்களின் இதயங்களையும் வெல்வார் என்று நம்புகிறேன். மிகவும் வித்தியாசமான, கடின உழைப்பு தேவைப்படுகிற இந்த முயற்சியை சாத்தியமாக்கி உள்ள இயக்குநர் மீரா மஹதி மற்றும் குழுவினருக்கு வாழ்த்துகள்."

இசையமைப்பாளர் வித்யாசாகர் பேசியதாவது...

"'டபுள் டக்கர்' படத்தின் நாயகன் தீரஜ்ஜை ஒரு சிறுவனாக தெரியும், பின்னர் மருத்துவராக தெரியும். ஒரு நாள் அவர் என்னிடம் வந்து தான் திரைப்படங்களில் நடிப்பதாகவும் 'டபுள் டக்கர்' திரைப்படத்திற்கு நான் இசையமைக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார். பின்னர் இயக்குநர் மீரா மஹதி இப்படத்தின் கதையை என்னிடம் விவரித்தார். எனக்கு மிகவும் பிடித்ததால் இசையமைக்க ஒப்புக்கொண்டேன்.

'டபுள் டக்கர்' படத்தில் பணியாற்றி உள்ள அனைவரும் சிறப்பான பங்காற்றி உள்ளார்கள். குறிப்பாக தொழில்நுட்ப கலைஞர்களின் உழைப்பு அபாரமானது. கடந்த 34 ஆண்டுகளாக எனக்கு தொடர்ந்து ஆதரவளித்து வரும் ரசிகர்கள் அனைவருக்கும் மிக்க நன்றி. இசைக்கு வயதே கிடையாது, நல்லிசைக்கும் மெல்லிசைக்கும் தமிழ் மக்கள் என்றுமே ஆதரவு அளிப்பார்கள். உங்களின் அன்பும் ஆதரவும் தான் என்னை இங்கே நிற்க வைத்துள்ளது. 'டபுள் டக்கர்' படத்தில் இடம்பெற்றுள்ள நான்கு பாடல்களும் நான்கு வகையானவை. இசையையும் படத்தையும் நீங்கள் ரசிப்பீர்கள் என்று நம்புகிறேன், நன்றி."

படத்தின் நாயகன் தீரஜ் பேசியதாவது...

"ரஜினி, கமல், விஜய், ஷாருக்கான் போன்ற முன்னணி நடிகர்களின் படங்களுக்கு பிறகு என்னுடைய படத்திற்கு இந்த மேடையை வழங்கிய சாய்ராம் கல்லூரிக்கு நன்றி. 'டபுள் டக்கர்' படத்திற்கு அருமையான இசையை தந்த வித்யாசாகர் அவர்களுக்கு மிக்க நன்றி. நிகழ்ச்சிக்கு வந்து ஆதரவு தெரிவித்த இயக்குநர் ரவிக்குமார், ஜெயம் ரவி அவர்களின் அன்புக்கு நன்றி. இப்படத்தைப் பற்றி கூற வேண்டும் என்றால் டபுள் டக்கரை திரையரங்கில் பாருங்கள், மகிழுங்கள், மகிழ்ச்சியுடன் திரையரங்கை விட்டு செல்லுங்கள். ஒரு கலகலப்பான படத்தை தர வேண்டும் என்ற எங்களது ஆசை நிறைவேறி உள்ளது. என்னுடன் பணியாற்றிய மூத்த கலைஞர்கள் அனைவருக்கும் நன்றி. உங்கள் அனைவருக்கும் இப்படம் பிடிக்கும் என்று நம்புகிறேன், நன்றி."

நாயகி ஸ்முரிதி வெங்கட் பேசியதாவது...

"எல்லோருக்கும் வணக்கம். மாணவர்கள் முன்னிலையில் இப்படத்தின் இசை வெளியிடப்படுவது மிக்க மகிழ்ச்சி. சிறு வயது முதலே வித்யாசாகர் அவர்களின் மிகப்பெரிய ரசிகை நான். அவரது இசையில் நடித்திருப்பது மிக்க மகிழ்ச்சி.

நிகழ்ச்சிக்கு வந்துள்ள ஜெயம் ரவி அவர்கள் மற்றும் இயக்குநர் ரவிக்குமார் அவர்கள் உள்ளிட்ட அனைவருக்கும் நன்றி. 'டபுள் டக்கர்' படத்தை பற்றி கூற வேண்டும் என்றால் இந்த படம் உங்களை மகிழ்விக்கும், உற்சாகப்படுத்தும், கட்டாயமாக ஏமாற்றாது. இப்படத்திற்காக மிகச் சிறந்த குழுவுடன் பணியாற்றியது மகிழ்ச்சி அளிக்கிறது, அனைவரும் திரையரங்குகளில் இப்படத்தை பார்த்து ஆதரவு அளிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்."

இயக்குநர் மீரா மஹதி பேசியதாவது...

"என்னுடைய முதல் படத்திற்கு இசையமைத்து எனக்கு மிகப்பெரிய பெருமையை வழங்கி இருக்கிற வித்யாசாகர் சாருக்கு நன்றி. இங்கு வந்து சிறப்பித்துள்ள இரண்டு ரவிகள் ஆகிய ஜெயம் ரவி சார் மற்றும் இயக்குநர் ரவிக்குமார் அவர்களுக்கு மிக்க நன்றி.

இளம் தலைமுறையாகிய உங்களை நம்பித்தான் இந்தியாவிலேயே புதிய முயற்சியாக 'டபுள் டக்கர்' திரைப்படத்தை உருவாக்கி இருக்கிறோம். கிராபிக்ஸ் கதாபாத்திரங்களை நடிகர்களுடன் நடிக்க வைத்துள்ளோம். உங்கள் குடும்பத்துடன் வந்து இப்படத்தை ரசிக்கலாம்."

நடிகர் எம் எஸ் பாஸ்கர் பேசியதாவது...

"இந்த படம் ஒரு அருமையான குழுவின் கூட்டு முயற்சி. இதில் எனக்கு சின்ன பாத்திரம் தான், ஆனால் மிகவும் சிறந்த வேடம். கிராபிக்ஸ் பாத்திரங்களை வைத்து ஒரு புதுமையான முயற்சியை 'டபுள் டக்கர்' குழுவினர் எடுத்துள்ளனர். ஏப்ரல் மாதம் வெளியாகியுள்ள இப்படத்தை ரசிகர்களாகிய நீங்கள் பார்த்து வெற்றி பெற செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இப்படத்தின் தயாரிப்பாளரும் இயக்குநரும் இன்னும் நிறைய படங்களை உருவாக்க வேண்டும் என்று வாழ்த்துகிறேன் நன்றி. நாயகன் தீரஜ் சிறப்பான பங்களிப்பை வழங்கியுள்ளார். வித்யாசாகர் அவர்களின் இசையில் எத்தனையோ படங்களில் நான் நடித்துள்ளேன். அவரது அற்புதமான இசை இப்படத்தை மெருகேற்றி உள்ளது."

நடிகர் காளி வெங்கட் பேசியதாவது...

"இப்படத்தில் நடித்தது ஒரு வித்தியாசமான அனுபவம். பெயருக்கு ஏற்ற மாதிரி டபுள் டக்கர் மிகவும் சிறப்பான திரைப்படமாக இருக்கும். வித்யாசாகர் அவர்களின் இசையில் நடித்திருப்பது மிக்க மகிழ்ச்சி. எங்கள் வீட்டில் அனைவருமே அவரது ரசிகர்கள். தீரஜ் அவர்களின் சுறுசுறுப்பு ஆச்சரியமானது. இயக்குநர் மீரா மஹதி வித்தைக்காரர். குழந்தைகள் முதல் பெரியோர்கள் வரை இந்த படத்தை அனைவரும் ரசிக்கலாம்."

நடிகர் கருணாகரன் பேசியதாவது...

"எங்களின் கல்லூரி நாட்களை தன் இசையால் இனிமையாக்கிய வித்யாசாகர் அவர்களுக்கு நன்றி. உங்கள் பாடல்களுக்கு நாங்கள் அனைவரும் தீவிர ரசிகர்கள். புதுமையான அனிமேஷன் படமான டபுள் டக்கரில் நடித்திருப்பது மிக்க மகிழ்ச்சி. பல இதயங்களை சரி செய்த தீராஜ் அவர்கள் இப்படத்தின் மூலம் இன்னும் பல இதயங்களை வெல்வார்."

திரைப்படத்தின் இணை தயாரிப்பாளர் மற்றும் இணை எழுத்தாளர் சந்துரு பேசியதாவது...

"இப்படத்தை நான் பார்த்து விட்டேன், மிகவும் சிறப்பாக வந்துள்ளது. உங்கள் அனைவருக்கும் பிடிக்கும் என்று நம்புகிறேன். இந்த நிகழ்ச்சிக்கு வந்து சிறப்பித்துள்ள ஜெயம் ரவி அவர்களுக்கும் இயக்குநர் ரவிக்குமார் அவர்களுக்கும் மிக்க நன்றி. 'டபுள் டக்கர்' உசரை நீங்கள் அனைவரும் பார்த்து ரசித்து இருப்பீர்கள் என்று நம்புகிறேன். படத்தை வெகு விரைவில் உங்களுக்கு வழங்க காத்திருக்கிறோம்.

இந்த விழாவின் நாயகன் வித்யாசாகர் சார் தான். அவரை 90ஸ் கிட்ஸின் உள்ளம் கவர்ந்த இசையமைப்பாளர் என்று சொல்வார்கள். ஆனால் இந்த நிகழ்ச்சியில் அவரது பாடல்கள் ஒளிபரப்பப்பட்ட போது 2கே கிட்ஸும் மிகவும் வைப் செய்தார்கள். இதன் மூலம் தலைமுறைகளை தாண்டி அவரை ரசிக்கிறார்கள் என்பதை நாம் புரிந்து கொள்ளலாம். இந்த வருட கோடை விடுமுறையை மகிழ்ச்சியுடன் கழிக்க ஏற்ற இடமாக 'டபுள் டக்கர்' படத்தை திரையிடும் திரையரங்குகள் இருக்கும்."

நிர்வாக தயாரிப்பாளர் எஸ் சேதுராமலிங்கம் பேசியதாவது...

"மிகவும் சவாலான கதைக்களம் என்பதால் அனைத்தையும் முன்னரே முறையாக திட்டமிட்டோம். இயக்குநரும் குழுவினரும் மிகவும் கடினமாக உழைத்துள்ளனர். படம் வெற்றி பெற வாழ்த்துகள்."

ஒளிப்பதிவாளர் கௌதம் ராஜேந்திரன் பேசியதாவது...

"இது என்னுடைய இரண்டாவது படம், மிகவும் அருமையாக வந்துள்ளது. அனைவரும் குடும்பத்தோடு திரையரங்குகளுக்கு சென்று பார்த்து ரசிக்க வேண்டும் என்று வேண்டுகிறேன். இதில் பணியாற்றியது சற்றே சவாலானது, ஏனென்றால் கிராபிக்ஸ் பாத்திரங்கள் படப்பிடிப்பின் போது இருக்காது என்பதால் அனைத்தையும் கற்பனையில் செய்ய வேண்டும். வித்யாசாகர் அவர்களின் பாடல்களை மிகவும் ரசித்து ஒளிப்பதிவு செய்தேன் 'டபுள் டக்கர்' திரைப்படத்திற்கு ஒளிப்பதிவு செய்ய எனக்கு வாய்ப்பளித்த அனைவருக்கும் மிக்க நன்றி."

படத்தொகுப்பாளர் வெற்றிவேல் ஏ எஸ் பேசியதாவது...

"அனைவருக்கும் நன்றி. வாய்ப்பளித்த தீரஜ், சந்துரு, மற்றும் மீரா மஹதி ஆகியோருக்கு நன்றி. 'டபுள் டக்கர்' மிகவும் சிறப்பாக உருவாகியுள்ளது, வித்யாசாகர் சாரின் இசை மிகவும் அருமை. அனைவரும் இந்த படத்தை ரசிப்பீர்கள் என்று நம்புகிறேன், நன்றி."

கலை இயக்குநர் சுப்பிரமணிய சுரேஷ் பேசியதாவது...

"எல்லோருக்கும் வணக்கம். வாய்ப்பளித்த அனைவருக்கும் நன்றி. 'டபுள் டக்கர்' மிகவும் சிறப்பாக உருவாகியுள்ளது."

# 'ஒத்த ஓட்டு முத்தையா' திரைப்படத்திற்காக தொடர்ந்து எட்டு மணி நேரம் டப்பிங் பேசிய கவுண்டமணி தேர்தல் தேதி அறிவிக்கப்பட்டுள்ள நிலையில் இறுதிக்கட்டத்தை எட்டியுள்ள போஸ்ட் புரொடக்ஷன் பணிகள்

*சென்னை, 19 மார்ச் 2024:* சினி கிராஃப்ட் ஃபிலிம்ஸ் தயாரிப்பில் சாய் ராஜகோபாலின் எழுத்து மற்றும் இயக்கத்தில் 'காமெடி கிங்' கவுண்டமணி கதையின் நாயகனாக நடிக்கும் முழு நீள அரசியல்-நகைச்சுவை திரைப்படமான 'ஒத்த ஓட்டு முத்தையா' போஸ்ட் புரொடக்ஷன் பணிகள் இறுதிக் கட்டத்தை எட்டியுள்ளன.

நாடாளுமன்ற தேர்தல் தேதிகளை இந்திய தேர்தல் ஆணையம் அறிவித்து அரசியல் களம் சூடு பிடித்துள்ள நிலையில், இப்படம் விறுவிறுப்பாக வெளியீட்டுக்கு தயாராகி வருகிறது.

சென்னையில் உள்ள பரணி' டப்பிங் ஸ்டூடியோவில் 'ஒத்த ஓட்டு முத்தையா' படத்தின் டப்பிங் பணிகளில் பங்கேற்ற கவுண்டமணி, தொடர்ந்து எட்டு மணி நேரம் உற்சாகத்துடன் டப்பிங் பேசி அனைவரையும் ஆச்சரியத்தில் ஆழ்த்தினார்.

தற்கால அரசியலை தனக்கே உரிய பாணியில் நையாண்டி செய்யும் வேடத்தில் கவுண்டமணியும் அவருடன் நெருக்கமாக பயணிக்கும் பாத்திரத்தில் யோகி பாபுவும் நடிக்கின்றனர். கவுண்டமணிக்கும் யோகி பாபுவுக்கும் இடையேயான கெமிஸ்ட்ரி மிக நன்றாக அமைந்திருப்பதாகவும் அவர்கள் வரும் காட்சிகள் அனைத்தும் ரசிகர்களை சிரிப்பு மழையில் நனைய வைக்கும் என்றும் இயக்குநர் சாய் ராஜகோபால் தெரிவித்தார். இவரும் இத்திரைப்படத்தில் ஒரு முக்கிய வேடத்தில் நடித்திருப்பது குறிப்பிடத்தக்கது.

கவுண்டமணி-செந்தில் நகைச்சுவை ஜோடிக்கு பிறகு கவுண்டமணி-யோகி பாபு கூட்டணி மிகவும் பேசப்படும் என்று தெரிவித்த இயக்குநர், இரு நடிகர்களும் தங்கள் காட்சிகளை மிகவும் ரசித்ததாக கூறினார்.

ஒட்டு மொத்த குடும்பத்துடன் கண்டு ரசிக்கக் கூடிய வகையில் உருவாகி வரும் இப்படத்தில் நடிகர் சிங்கமுத்து மகன் வாசன் கார்த்திக், மறைந்த நடிகர் நாகேஷின் பேரனும் ஆனந்த்பாபுவின் மகனுமான கஜேஷ், மற்றும் நடிகர் மயில்சாமி மகன் அன்பு மயில்சாமி ஆகியோர் முக்கிய கதாபாத்திரங்களில் நடிக்க, இவர்களுக்கு ஜோடியாக மூன்று இளம் நடிகைகள் நடிக்கின்றனர்.





கவுண்டமணி ஜோடியாக ராஜேஸ்வரி நடிக்கிறார். மாறுபட்ட ஒரு நகைச்சுவை பாத்திரத்தில் சிங்கமுத்துவும், நல்லதொரு வேடத்தில் சித்ரா லட்சுமணனும் நடிக்கின்றனர். மேலும், மொட்டை ராஜேந்திரன், ஓ ஏ கே. சுந்தர், ரவிமரியா, வையாபுரி, முத்துக்காளை, டாக்டர் காயத்ரி, தாரணி, கூல் சுரேஷ், சென்றாயன், லேகா ஸ்ரீ, டி கே ஸ்ரீநிவாசன், சதீஷ் உள்ளிட்ட பெரும் நட்சத்திர பட்டாளம் களம் இறங்கியுள்ளது.

படம் குறித்து பேசிய இயக்குநர் சாய் ராஜகோபால், "சுமார் 70 படங்களில் கவுண்டமணி மற்றும் செந்திலுக்கான நகைச்சுவை பகுதியை எழுதியதோடு, பல்வேறு படங்களில் உதவி, துணை மற்றும் இணை இயக்குநராக நான் பணியாற்றி உள்ளேன். மணிவாசகம், அர்ஜுன், டி பி கஜேந்திரன் உள்ளிட்டோர் உடன் பணியாற்றி உள்ளேன். எனது 25 ஆண்டு கால திரையுலக பயணத்தில், பாண்டியராஜன், ஈஸ்வரி ராவ் நடிப்பில் 'சுந்தரி நீயும் சுந்தரன் நானும்', 'பாய்ஸ்' மணிகண்டன் மற்றும் சிம்ரன் நடிப்பில் 'கிச்சா வயசு 16' ஆகிய படங்களை இயக்கி உள்ளேன்.

'ஒத்த ஓட்டு முத்தையா' படத்தின் கதையை கவுண்டமணி அவர்களிடம் சொன்னபோது மிகவும் மகிழ்ச்சி தெரிவித்ததோடு நடிப்பதற்கும் உடனே சம்மதம் தெரிவித்தார். ஆறு முதல் 60 வரை அனைத்து வயதினரும் ரசிக்கக்கூடிய அரசியல் கலந்த முழுநீள நகைச்சுவை திரைப்படமாக இது இருக்கும். இப்படத்தை ரசிகர்கள் கண்டு மகிழ்ந்து தங்களது பேராதரவை தெரிவிப்பார்கள் என்று நம்புகிறேன்," என்று கூறினார்.

இத்திரைப்படத்திற்கு சித்தார்த் விபின் இசையமைக்க, ஹெக்டர் ஸ்ரீதர் ஒளிப்பதிவை கையாண்டுள்ளார். கலை இயக்கத்திற்கு மகேஷ் நம்பியும், படத்தொகுப்புக்கு ராஜா சேதுபதியும் பொறுப்பேற்றுள்ளனர். பி ஜி துரை, தீனா மற்றும் மணிவண்ணன் ஆகியோர் அசோசியேட்டுகளாக பணியாற்றுகின்றனர். தயாரிப்பு மேலாளர்: ராஜன், மக்கள் தொடர்பு: நிகில் முருகன். கோவை லட்சுமி ராஜன் இணை தயாரிப்பில் 'ஒத்த ஓட்டு முத்தையா' விரைவில் திரையரங்குகளில் வெளியாக உள்ளது.

"printed by R.SATHYANARAYANAN and published by R.SATHYANARAYANAN on behalf of R.SATHYANARAYANAN and printed at Chennai Offset Printers No.19/1, 21/2, Kitabath Khan Bhandur street, Ellis Road, Chennai-600 002, and published at No.11, South Perumal Koil Street, Vadapalani, Chennai - 600 026 Editor R.SATHYANARAYANAN"

ஹலோ மெட்ராஸ்
hellomadrasdaily@gmail.com தினசரி காலை நாளிதழ்
உள்ளது உள்ளபடி

செவ்வாய்கிழமை,
மார்ச் 19, 2024

# சென்னை அமெரிக்க மையத்துடன் இணைந்து ஊடகத் திறன் மேம்பாடு தொடர்பான பயிலரங்கை யாழ்ப்பாண அமெரிக்க மையம் நடத்தியது



யாழ்ப்பாணம், 19 மார்ச் 2024: யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்களை சென்னையிலுள்ள மாணவர்களுடன் காணொலி மூலம் இணைத்து ஊடகத் திறன் மேம்பாடு தொடர்பான பயிலரங்கை யாழ்ப்பாண அமெரிக்க மையம், சென்னை அமெரிக்க மையத்துடன் இணைந்து மார்ச் 15 அன்று நடத்தியது.

ஊடகப் பயிற்றுவிப்பாளரும் யுவர்ஸ்டோரி தமிழ் இணையதள ஆசிரியருமான இந்துஜா ரகுநாதன் தலைமையில் நடைபெற்ற இந்த பயிலரங்கில், சவால்கள் நிறைந்த இன்றைய ஊடகதளத்தில் பயணிப்பதற்கு தேவையான திறன்களான பொய் செய்திகளைக் கண்டறிதல், சிந்தனைத் திறனை மேம்படுத்துதல், பக்கச்சார்புகளை அடையாளம் காணுதல் மற்றும் உண்மைகளை கண்டறிதல் உள்ளிட்டவற்றில் 22 இலங்கை மற்றும் தென்னிந்திய மாணவர்களுக்குப் பயிற்சியளிக்கப்பட்டது.

கிழக்கு மற்றும் வட மாகாணங்களில் ஐந்து நாள் பயணத்தை மேற்கொண்ட இலங்கையிலுள்ள அமெரிக்கத் தூதரகத்தின் துணைத் தூதர் டக்ளஸ் சொனெக், கருத்து சுதந்திரத்தினைப் பாதுகாப்பதிலும் ஊடகத் திறன்களின் மேம்பாட்டின் மீதும் அமெரிக்கா கொண்டுள்ள அசைக்க முடியாத உறுதிப்பாட்டை வலியுறுத்தும் வகையில் இம்மாணவர்களைச் சந்தித்துக் கலந்துரையாடினார்.

"தவறான தகவல்கள் கரைபுரண்டோடும் இன்றைய காலகட்டத்தில் போலிச் செய்திகளிலிருந்து உண்மையைப் புரிந்துகொண்டு பிரித்தறிவதென்பது முன்னெப்போதையும் விட மிக முக்கியமானது" என துணைத் தூதர் சொனெக் குறிப்பிட்டார். எல்லை தாண்டிய அறிவுப் பரிமாற்றத்தைப் பேணிவளர்ப்பதிலும், இளைஞர்களிடையே ஊடகப் புரிதலை மேம்படுத்துவதிலும் இப்பயிலரங்கின் முக்கியத்துவத்தை எடுத்துரைத்த அவர், "ஊடகத் திறன் மேம்பாடு தொர்பான பயிற்சியை அமெரிக்கா ஆதரிக்கிறது. சிக்கலான தகவல் பரிமாற்ற தளத்தில் பயணிப்பதற்கும், தகவலறிந்த குடிமக்களை ஊக்குவிப்பதற்கும், ஜனநாயக விழுமியங்களை வலுப்படுத்துவதற்கும் இன்றியமையாத திறன்களை தனிநபர்களுக்கு இந்த பயிலரங்கம் வழங்குகிறது," எனவும் தெரிவித்தார்.

அமெரிக்கத் தூதரகத்தின் அமெரிக்க மையங்கள் பற்றி: கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதரகத்தின் அமெரிக்க மைய வலையமைப்பின் ஒரு பகுதியாக யாழ்ப்பாண அமெரிக்க மையம் திகழ்கிறது. கொழும்பு, யாழ்ப்பாணம், கண்டி, மாத்தறை மற்றும் மட்டக்களப்பு ஆகிய இடங்களில் அமெரிக்க மையங்கள் அமைந்துள்ளன. நிகழ்ச்சிகள், விரிவுரைகள், புத்தகங்கள், திரைப்படங்கள் மற்றும் பத்திரிகைகள் வாயிலாக அமெரிக்காவைப் பற்றி அறிந்து கொள்வதற்கும் அமெரிக்காவுடன் தொடர்புகொள்வதற்குமான சாதகமான சூழல்களை இம்மையங்கள் வழங்குகின்றன. பொதுவான மற்றும் உலகளாவிய நலன் சார்ந்த விஷயங்கள் தொடர்பான கலந்துரையாடல்கள் மற்றும் அறிவுப் பரிமாற்றங்களை அனைத்து தரப்பு இலங்கை மக்களும் மேற்கொள்வதற்கான தளங்களாக அமெரிக்க மையங்கள் திகழ்கின்றன. பல்வேறு வசதிகள் மற்றும் சமூக ஈடுபாட்டிற்கான அணுகலை வழங்குவதன் மூலமாக கல்விரீதியான வளர்ச்சி, கலாச்சாரப் பரிமாற்றம் மற்றும் சமூக மேம்பாடு ஆகியவற்றை ஊக்குவிப்பதற்கு இம்மையங்கள் அர்ப்பணிக்கப்பட்டுள்ளன. காணொலி மூலமாகவும் நேரடியாகவும் பல்வேறு நிகழ்ச்சிகளை அமெரிக்க மையங்கள் ஏற்பாடு செய்கின்றன. ஆங்கில மொழி தொடர்பான பயிற்சி அமர்வுகள், தொழில்முனைவு தொடர்பான வழிகாட்டல்கள், அமெரிக்காவில் உயர்கல்வியைத் தொடர்வது பற்றிய தகவல்களை வழங்கும் நிகழ்வுகள், அமெரிக்கக் கொள்கை, சமூகம் மற்றும் கலாச்சாரம் தொடர்பான கலந்துரையாடல்கள், திரைப்படத் திரையிடல்கள் மற்றும் கதை சொல்லும் அமர்வுகள் என அனைத்து தரப்பினருக்குமான நிகழ்ச்சிகள் இங்கு நடைபெறுகின்றன.

# டிவிஎஸ் ரோனின் தனது "டெஸ்ட் ரைட் கிரிக்கெட்" (டிஆர்சி) பிரச்சார இயக்கத்துடன் சாலைகளில் கம்பீரமாக வலம் வருகிறது!




சென்னை, 19 மார்ச் 2024: இரண்டு மற்றும் மூன்று சக்கர வாகன பிரிவுகளில் செயல்படும் முன்னணி உலகளாவிய வாகன தயாரிப்பு நிறுவனமான டிவிஎஸ் மோட்டார் கம்பெனி, 5 நகரங்களில் அதன் டிவிஎஸ் ரோனின் சோதனை சவாரி கிரிக்கெட் இயக்கத்தின் வெற்றியாளரை கௌரவித்தது.

நாட்டில் உலகக் கோப்பை கிரிக்கெட் போட்டியைக் கொண்டாட, டிவிஸ் ரோனின், 2023-ம் ஆண்டு உலகக் கோப்பை கிரிக்கெட் போட்டியின் போது 'மூவ் லைக் எ ரோனின்' என்ற விளம்பரப் பிரச்சார இயக்கத்தைத் தொடங்கியது. இதில் ஷுப்மன் கில் பங்கேற்றார். இந்த இயக்கத்தின் நேரடி அனுபவ பிரிவு டெஸ்ட்-ரைட் கிரிக்கெட் என்று அழைக்கப்பட்டது. இது மோட்டார் சைக்கிள் ஆர்வலர்களுக்கு டிவிஎஸ் ரோனின் வாகனத்தை சோதனை சவாரி செய்வதற்கான, விளையாட்டு நிகழ்வுகளுடன் கூடிய வாய்ப்பை வழங்கியது. இந்தியாவில் உள்ள டீலர்ஷிப் நிறுவனங்களில் டிவிஎஸ் ரோனின் மோட்டார் சைக்கிள் சோதனை சவாரிகள் மற்றும் வினாடி வினாக்கள் நடைபெற்றன. அதன் அடிப்படையில் ரன்கள் வழங்கப்பட்டன. மோட்டார் சைக்கிள் ஆர்வலர்களுக்கு இந்த இயக்கம் முதல் வகையான கிரிக்கெட் அனுபவமாக இருந்தது. இந்த இயக்கம் ஆர்வலர்கள் மத்தியில் பெரும் வரவேற்பையும் பங்கேற்பையும் பெற்றது. இந்தியாவில் உள்ள டிவிஸ் மோட்டார் நிறுவன டீலர்ஷிப்-களின் மூலம், நூற்றுக்கணக்கான டிவிஎஸ் ஆர்வலர்களிடமிருந்து பதிவுகள் பெறப்பட்டன.

அதிக புள்ளிகளைப் பெற்றவர்களை கௌரவிக்கும் வகையில், டிவிஎஸ் ரோனின் மோட்டார் சைக்கிளின் உலகக் கோப்பை பதிப்பு நாடு முழுவதும் 5 வெற்றியாளர்களுக்கு வழங்கப்பட்டது. அவர்கள் இந்த பிரத்யேக வாகனத்தின் உரிமையாளர்களாக மாறியுள்ளனர். டிவிஎஸ் ரோனின் என்பது இந்த நிறுவனத்தின் முதல் வகையான பழைமையும் புதுமையும் கலந்த நவீன (நவீன-ரெட்ரோ) மோட்டார் சைக்கிள் ஆகும். இது உற்சாகமான வாழ்க்கையை ஊக்குவிக்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. டுயல்-சேனல் ஏபிஎஸ், மழை மற்றும் நகர்ப்புற ஏபிஎஸ் மோட்-கள், குரல் உதவியுடன் கூடிய புளூடூத் இணைப்பு மற்றும் பல போன்ற புதிய தொழில்நுட்ப வசதிகளுடன், இந்த மோட்டார் சைக்கிள் மிகச் சிறந்த செயல்திறனுடன் அமைந்துள்ளது.

இந்த நிகழ்ச்சியில் பேசிய டிவிஎஸ் மோட்டார் கம்பெனியின் பிரீமியம் பிரிவின் வர்த்தக தலைவர் விமல் சும்ப்லி, "டிவிஎஸ் ரோனின் வாகனத்தின் டெஸ்ட்-ரைட் கிரிக்கெட் இயக்கம் மிகச் சரியான, சிறந்த நேரத்தில் நடத்தப்பட்டுள்ளது. ஷுப்மன் கில் இந்த இயக்கத்தின் அடையாளமாக இருந்ததால், எங்கள் டீலர்ஷிப் நிறுவனங்களில் சோதனை சவாரிகளைப் பிரபலப்படுத்த உலகக் கோப்பை கிரிக்கெட்டைத் திறம்பட பயன்படுத்த முடிந்தது. இதை செயல்படுத்தியது உண்மையிலேயே ஒரு தனித்துவமான அம்சமாகும். இதில் பங்கேற்றவர்களுக்கு வழக்கமான சோதனை சவாரிகளுக்கு அப்பாற்பட்ட ஒரு விளையாட்டு அனுபவம் கிடைத்தது. உற்சாகமான, விவரிக்க முடியாத சிறந்த உலகிற்கு புதிய வாகன ஓட்டிளை ஈர்ப்பதற்காக ஒரு நிலையான தொழில் நடைமுறையை டிவிஎஸ் ரோனின் புதுமையான முறையில் செய்துள்ளது. இதைப் பார்ப்பது எனக்கு மிகுந்த மகிழ்ச்சியைத் தருகிறது. டிவிஎஸ் ரோனின் வாகனத்தின் வரையறுக்கப்பட்ட உலகக் கோப்பை பதிப்பின் 5 வெற்றியாளர்களை நான் வாழ்த்துகிறேன். உங்களுக்காக காத்திருக்கும் பல வரையறுக்கப்படாத சாகசங்கள் காத்திருக்கின்றன." என்றார்.

சென்னை, மும்பை, புனே, டெல்லி மற்றும் குவஹாத்தி ஆகிய நகரங்களில் உள்ள டிவிஎஸ் டீலர்ஷிப் நிறுவனங்களில் இந்த விழா நடைபெற்றது. அந்தந்த நகரங்களிலிருந்து பங்கேற்ற போட்டியாளர்கள் இந்த நிகழ்வில் கலந்து கொள்ள அழைக்கப்பட்டனர். வெற்றியாளர்களுக்கு மோட்டார் சைக்கிள் வழங்கப்பட்டது. இந்த நிகழ்வு மோட்டார் வாகன ஆர்வலர்கள், அதில் ஈடுபடுபவர்கள் மற்றும் ஊடகத்தினரை ஒருங்கிணைப்பதாக அமைந்தது. அனைவரும் இணைந்து வெற்றியாளர்களையும், டிவிஎஸ் ரோனின் (டிவிஎஸ் ரோனின்) வாகனத்தின் புதிய வரையறைகளுடன் உற்சாகமான வாழ்க்கை மீதான அன்பையும் அவர்கள் கொண்டாடினர்.

# தேர்தல் பத்திரங்கள் மூலம் காங்கிரசை விட திரிணாமுல் காங்கிரஸ் கட்சிக்கு அதிக நன்கொடை

சென்னை, 19 மார்ச் 2024: தேர்தல் பத்திரங்கள் தொடர்பான கூடுதல் தகவல்களை தேர்தல் கமிஷன் நேற்று வெளியிட்டு உள்ளது. இதில் காங்கிரசை விட திரிணாமுல் காங்கிரஸ் கட்சி அதிக நன்கொடை பெற்றிருப்பது தெரிய வந்துள்ளது.

அரசியல் கட்சிகளுக்கு நன்கொடை வழங்கும் தேர்தல் பத்திர நன்கொடை திட்டத்தை சுப்ரீம் கோர்ட் கடந்த மாதம் 15ந் தேதி ரத்து செய்தது. மேலும் தேர்தல் பத்திரங்களை பெற்றவர்கள், அவற்றை பணமாக்கிய கட்சிகள், நன்கொடை தொகை உள்ளிட்ட விவரங்களை தேர்தல் கமிஷனிடம் சமர்ப்பிக்குமாறு பாரத ஸ்டேட் வங்கிக்கும் நீதிபதிகள் உத்தரவிட்டனர்.

அதன்படி இந்த விவரங்களை கடந்த 12ந்தேதி தேர்தல் கமிஷனிடம் பாரத ஸ்டேட் வங்கி வழங்கியது. இந்த விவரங்களை கடந்த 14ந்தேதி தேர்தல் கமிஷன் வெளியிட்டது.

'பாரத ஸ்டேட் வங்கி சமர்ப்பித்த தேர்தல் பத்திரங்களின் வெளிப்பாடு' என்ற பெயரில் 2 பாகங்களாக அவை வெளியிடப்பட்டு இருந்தன

இதில் கடந்த 2019 ஏப்ரல் முதல் கடந்த ஜனவரி வரை நாட்டின் முக்கிய கட்சிகள் பெற்ற நிதி விவரங்கள் வெளியிடப்பட்டு இருந்தன.

இதன் தொடர்ச்சியாக தேர்தல் பத்திரங்கள் தொடர்பான கூடுதல் விவரங்களை தேர்தல் கமிஷன் நேற்று வெளியிட்டது.

அதாவது தேர்தல் பத்திரங்கள் அறிமுகப்படுத்தப்பட்ட 2018 முதல் கட்சிகள் பெற்ற தொகை விவரம் வெளியிடப்பட்டு உள்ளது. மேலும் எந்தெந்த நிறுவனங்கள், எந்தெந்த கட்சிகளுக்கு நன்கொடை வழங்கியுள்ளன என்ற தகவல்களும் இடம்பெற்று உள்ளன.

குறிப்பாக, சுப்ரீம் கோர்ட் கடந்த 2019-ம் ஆண்டு ஏப்ரல் 12ந்தேதி வழங்கிய இடைக்கால உத்தரவுப்படி தேர்தல் கமிஷனில் கட்சிகள் வழங்கிய நன்கொடையாளர்களின் தகவல்களும் இடம்பெற்று உள்ளன.

இதன்படி மத்தியில் ஆளும் பாரதீய ஜனதா ரூ.6,986.5 கோடி பெற்று முதலிடத்தை பிடித்து உள்ளது.

அடுத்ததாக மேற்கு வங்காளத்தை ஆளும் திரிணாமுல் காங்கிரஸ் கட்சி ரூ.1,397 கோடி பெற்று 2வது இடத்தை பெற்றிருக்கிறது. அதேநேரம் தேசிய கட்சியான காங்கிரஸ் ரூ.1,334 கோடியுடன் 3வது இடத்தில் உள்ளது. இதன் மூலம் காங்கிரசை விட அதிக நிதியை திரிணாமுல் காங்கிரஸ் பெற்று இருக்கிறது.

இதைத்தவிர பாரதிய ராஷ்டிர சமிதி (ரூ.1,322 கோடி), பிஜூ ஜனதாதளம் (ரூ.944.5 கோடி), தி.மு.க. (ரூ.656.5 கோடி), ஒய்.எஸ்.ஆர். காங்கிரஸ் (ரூ.442.8 கோடி) அடுத்தடுத்த இடங்களில் உள்ளன.

இதைப்போல தெலுங்குதேசம் (181.35 கோடி), மதசார்பற்ற ஜனதாதளம் (89.75 கோடி), ஆம் ஆத்மி (ரூ.69 கோடி), சிவசேனா (ரூ.60.4 கோடி), ராஷ்ட்ரீய ஜனதாதளம் (ரூ.56 கோடி), சமாஜ்வாடி (ரூ.14,05 கோடி), அகாலிதளம் (ரூ.7.26 கோடி), அ.தி.மு.க. (ரூ.6.05 கோடி), தேசிய மாநாடு (ரூ.50 லட்சம்) போன்ற கட்சிகளும் தேர்தல் பத்திரங்கள் மூலம் நிதி பெற்று உள்ளன.

அதேநேரம் மார்க்சிஸ்ட் கட்சி தேர்தல் பத்திரங்கள் மூலம் நன்கொடை பெறவில்லை என தேர்தல் கமிஷனிடம் கூறியுள்ளது.

பகுஜன் சமாஜ், இந்திய தேசிய லோக்தளம், மஜ்லிஸ் கட்சிகள் எந்த ரசீதுகளையும் தேர்தல் கமிஷனிடம் வழங்கவில்லை.

அதிக தேர்தல் பத்திரங்களை வாங்கியதில் (ரூ.1,368 கோடி) முதலிடத்தில் உள்ள லாட்டரி மார்ட்டினின் பியூச்சர் கேமிங் நிறுவனம் அதில் சுமார் 37 சதவீதத்தை அதாவது ரூ.509 கோடியை தி.மு.க.வுக்கு வழங்கி இருப்பது தெரியவந்துள்ளது.

இதைத்தவிர சன் டி.வி. ரூ.100 கோடி உள்பட மேலும் பல நிறுவனங்களும் தேர்தல் பத்திரம் மூலம் தி.மு.க.வுக்கு நிதி வழங்கி இருக்கின்றன.

தேர்தல் பத்திரங்கள் மூலம் தங்களுக்கு நன்கொடை வழங்கியவர்களின் அடையாளத்தை தேர்தல் கமிஷனில் வழங்கியிருக்கும் கட்சிகளில் தி.மு.க. முக்கியமானது.

இதைப்போல அ.தி.மு.க.வுக்கு வழங்கப்பட்ட நன்கொடையில் பெரும்பகுதி, இந்தியா சிமென்ட்ஸ் நிறுவனத்துக்கு சொந்தமான சென்னை சூப்பர் கிங்ஸ் ஐ.பி.எல் கிரிக்கெட் அணி வழங்கியதாக தேர்தல் கமிஷனில் கூறப்பட்டு உள்ளது.

மேலும் மதசார்பற்ற ஜனதாதளத்தின் நன்கொடையாளர்களில் ஆதித்யா பிர்லா குழுமம், இன்போசிஸ், ஜே.எஸ்.டபிள்யூ., எம்பசி குழுமம் ஆகியவை முக்கியமானவை ஆகும்.

அதேநேரம் பா.ஜனதா, காங்கிரஸ், திரிணாமுல் காங்கிரஸ், ஆம் ஆத்மி உள்ளிட்ட கட்சிகள் இந்த தகவல்களை தேர்தல் கமிஷனிடம் வழங்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.